
# சிலுவையில் மரணம்



பைபிள் தரும் 10 சான்றுகள்



## நூலாசிரியரைப் பற்றி...

இப்புத்தகத்தின் ஆசிரியர் ஹஸ்ரத் மவ்லானா அபுல் அதா ஜலந்தரி இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்திலுள்ள ஜலந்தர் மாவட்டத்தில் 1904 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள் பிறந்தார். தனது தந்தையாரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக காதியானிலுள்ள தியாலஜிகள் கல்லூரியில் பயின்று தமது வாழ்வை இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்காக அர்ப்பணித்தார்.1927 ஆம் ஆண்டு பிரசாரகராக தமது பணியை துவங்கிய அவர்கள், 1931 ஆம் ஆண்டு முதல் 1936 ஆம் ஆண்டு வரை பாலஸ்தீனத்தில் பணியாற்றி அல் புஷ்ரா எனும் அரபிப் பத்திரிகையை துவக்கினார்கள். அப்பத்திரிகை இன்று வரை வெளிவந்து கொண்டிருக்கிறது. மேலும் அவர் அல் ஃபுர்கான் எனும் உருது பத்திரிகையை துவக்கி 26 ஆண்டுகள் அதாவது தமது மரணம் வரை அதன் ஆசிரியராக பணியாற்றினார்கள்.

தமது வாழ்வில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்காக பல்வேறு மத அறிஞர்களுடன் விவாதம் புரிந்தார். மேலும் அவர் காதியானிலும் அதன்பின் ரப்வாவிலும் தியாலஜிகள் கல்லூரியின் முதல்வராக பணியாற்றினார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பல்வேறு நிர்வாக துறைகளிலும் முக்கிய அமைப்புகளிலும் செயலாளராக பொறுப்பு வகித்தார். அவரது ஒப்பற்ற சேவைகளை அங்கீகரிக்கின்ற வகையில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1956 ஆம் ஆண்டு ரப்வாவில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின்போது அவர்களுக்கு **காலிதே அஹ்மதிய்யத்** எனும் பட்டத்தை வழங்கி கவுரவித்தார்கள்.

1974 ஆம் ஆண்டு பாகிஸ்தான் பாராளுமன்றத்திற்கு மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது (ரஹி...) அவர்கள் சென்றபோது இவர்களும் அந்தக் குழுவில் அங்கம் வகித்தார்கள்.

அவர்களது பொன்னான வாழ்வும், செயல்பாடுகளும் 1977 ஆம் ஆண்டு மே 30 ஆம் நாள் நிறைவு பெற்றது. அவர்கள் ரப்வாவிலுள்ள பஹிஷ்தி மக்பராவில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

Death on the cross
(in Tamil)

# சிலுவையில் மரணம் ?

ஆக்கம்

ஹஸ்ரத் மவ்லானா அபுல் அதா ஜலந்தரி

தமிழாக்கம்

J. S. அன்வர் அஹ்மது

Copyrights Reserved

**Siluvaiyil Maranam ?**

Tamil version of

**"Death on the Cross?"** **(English)**

By Hadhrath Maulana Abul-Atha Jalandhari H.A.



| | |
|---|---|
| **First Edition** | **2010** |
| **Present Edition** | **2019** |
| **Copies** | **1000** |

Published by :

**NAZARAT NASHR-O-ISHAAT**
Sadr Anjuman Ahmadiyya,
Gurdaspur Dist-143516,Qadian, Punjab, India.

Printed at :

Fazl-e-Umar Printing Press, Qadian

Noorul Islam Toll Free No : 1800-3010-2131
Tamil Toll Free No : 1800-425-40000

بسم الله الرحمن الرحيم

# பதிப்புரை

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இலண்டன் பள்ளிவாசலின் தற்போதையை இமாம் மவ்லானா அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப் அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் **மவ்லானா அபுல் அதா ஜலந்தரி** அவர்களின் இச்சிறு நூல் அவர்களால், உடல் நலம் இல்லாத தருணத்தில் சொல்லச் சொல்ல அவர்களின் மகன் இமாம் சாஹிப் மூலம் உருதுவில் எழுதப்பட்டு அன்றைய தினம் வெளிவந்த *'அல் ஃபுர்கான்'* இதழில் வெளியிடப்பட்டது. இதன் ஆங்கில மொழியாக்கம் இலண்டன் பள்ளிவாசலிலிருந்து வெளியிடப்படுகின்ற *'முஸ்லிம் ஹெரால்ட்'* எனும் ஆங்கில இதழில் வெளியிடப்பட்டது. அதன்பின் நூல் வடிவில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு அன்றைய ஆங்கிலேயர்களிடம் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

கிறித்துவ மதத்தின் தவறான கொள்கைகள் பைபிளின் புதிய ஏற்பாட்டின் ஆதாரங்களுடன் மிகச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் படிப்பவர்களை மிகவும் சிந்திக்க வைக்கின்ற, நீண்ட நாள் தாம் இருந்த தவறான கொள்கையை அறியக்கூடிய அளவில் நடுநிலையில் சிந்திக்கக்கூடிய மக்களின் மனங்களை மாற்றும் சக்தி படைத்தது எனச் சொன்னால் அது மிகையாகாது!

இந்நூல் தமிழ் கூறும் நன்மக்கள் அறியும் வகையில் தூத்துக்குடி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த சகோதரர் **ஜனாப் J.S. அன்வர் அஹ்மது** அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டு, தமிழக புத்தக சரிபார்ப்புக் குழுவினால் சரிபார்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் அல்லாஹ் அதற்கான நற்கூலியை வழங்குவானாக. மேலும் இந்த நூலின் மூலம் அதிகமான மக்களுக்கு நேர்வழி கிடைக்க அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன்.

01.08.2010 —வெளியீட்டாளர்

# அணிந்துரை

காலம் சென்ற எனது தந்தையார் ஹஸ்ரத் மவ்லானா அபுல் அதா ஜலந்தரி இறையருளால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் குறிப்பிடத்தக்க அறிஞராக விளங்கினார்கள். தம் வாழ்நாள் முழுவதையும் இந்த ஜமாஅத்தின் தொண்டிற்காக அர்ப்பணிப்பதை தமக்கு கிடைத்த பெரும் பேறாகக் கருதினார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மூன்றாவது கஃபத்துல் மஸீஹ் (ரஹி) ஆகியோருடன் பணியாற்றும் நல்வாய்ப்பு கிடைத்திருந்தது.

அன்னாருடைய இச்சிறப்பு மிக்க சேவையினை அங்கீகரிக்கும் முகமாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அன்னாருக்கு ஆரம்ப கால இஸ்லாமிய வரலாற்றில் நடைபெற்ற போர்களில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் புகழ்பெற்ற தோழரான, வீரத்திற்கும், வெற்றிகளுக்கும் இலக்கணமாக விளங்கிய **'காலித்'** என்ற பெயரை சூட்டினார்கள்.

சிலவேளைகளில் அதிக பக்கங்களைக் கொண்ட நூற்களைவிட சிறிய பிரசுரம் பெரும் புரட்சியை ஏற்படுத்தி விடுகிறது. உங்கள் கையிலிருக்கும் இச்சிறு பிரசுரமும் அது போலவே அமையும் என்று நம்புகிறேன்.

என் தகப்பனார் இந்நூலை எழுதியபோது இருந்த நிலை என் நினைவுக்கு வருகிறது. அவர்கள் உடல் நலம் குன்றி இருந்தபோது சற்றே ஓய்வெடுத்து நலம் பெற காஷ்மீரிலுள்ள ரம்பாரி என்னும் குக்கிராமத்துக்கு சென்றார்கள். அன்னாரின் உடல் நலமின்மையின் காரணமாக இந்த முழுக்கட்டுரையையும் அவர் கூற நான் எழுதினேன். பின்னர் இந்த முழுப்பிரசுரம் என் தகப்பனார் ஆசிரியராக இருந்த *'அல் ஃபுர்கான்'* என்ற மாத இதழில் வெளி வந்தது. இதன் ஆங்கில மொழியாக்கம் பின்பு இலண்டன் பள்ளிவாசல் வெளியிட்ட *'முஸ்லீம் ஹெரால்ட்'* என்ற பத்திரிகையில் வெளி வந்தது. மீண்டும் பரந்த அளவில் விநியோகம் செய்யப்படுவதற்காக இது ஒரு பிரசுரமாக உருவாக்கப்பட்டது.

சில பக்கங்களைக் கொண்ட இதனை கருத்துச் செறிவுடையதாகவும், ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் படிப்பவர்

கண்டு கொள்வர் என நம்புகிறேன். பரிசுத்த வேதாகமத்திலிருந்து 10 சான்றுகளை இது விளக்குகிறது. இவை இறுதியில் தற்கால கிறிஸ்தவர்களது இயேசுவின் (அன்னாருக்கு கருணை கிடைக்கட்டும்) சிலுவை மரணம் குறித்த கொள்கைகள் தவறானவை என ஆதாரப்பூர்வமாக விளக்குகிறது. இங்கு கூறப்படும் சான்றுகள் யாவும் எவ்வித வேறுபாடுகளுக்கும் உட்படக் கூடாது என்ற காரணத்திற்காக பைபிளில் இருந்தே எடுக்கப்பட்டு உங்கள் முன் தெளிவாக உரைக்கப்படுகின்றன. இப்பிரசுரம் முதலில் வெளிவந்தபோது மிகவும் பிரபலமானதாகவும், பயனுடையதாகவும் விளங்கியது. எடுத்துக்காட்டாக திருமதி சல்மா சயீத் கான் என்ற கிறிஸ்தவப் பெண்ணின் வாழ்க்கையில் இது எப்படிப்பட்ட விளைவை ஏற்படுத்தியது என்று கூறுகிறேன்.

காலம் சென்ற, டாக்டர் ஸயீத் கான் அவரிடம் போதனை செய்து கடைசியில் இந்நூலைப் படிக்கக் கொடுத்தபோது, அது உள்ளத்தின் ஆழத்திலிருந்த நம்பிக்கையின் அடித்தளத்தையே அசைத்துவிட்டது என அவர் என்னிடம் கூறினார். இதைப் படித்த பின் இதில் கூறப்பட்ட சான்றுகள் மிகவும் ஆழ்ந்த சிந்தனையுடன் ஆராயத்தக்கவை என உணர்ந்ததாகக் கூறினார். அவரது வார்த்தைகளில் கூறுவதெனில், ‘இப்பிரசுரம் இஸ்லாத்தை நோக்கிய அவரது ஆன்மீகப் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்’. இதனைப் படித்தறிந்ததன் காரணத்தால் இயேசுவின் வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி அவர் சிந்திக்கத் தொடங்கியதுடன் அல்லாஹ்வின் அருளால் இறுதியாக முழு மனதுடன் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தார்.

நான் மேலும் உளமாரக் கூறுகிறேன். திருமதி சல்மான் கான் தம்மை அர்ப்பணித்தவராக இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துக் கூறுவதில் மிகவும் திறம்பட்டவராக விளங்கினார். அவரது அரிய முயற்சியால் பல ஆங்கிலேயர்களை இஸ்லாத்தின் பக்கம் திருப்பினார். இறைவன் அன்னாருக்கு நீண்ட ஆயுளையும் இப்புனிதப் பணியில் மகத்தான வெற்றியையும் வழங்குவானாக.

**அதாவுல் முஜீப் ராஷித்**

**இமாம், இலண்டன் பள்ளிவாசல்**

**இங்கிலாந்து**

30.12.2003

## நான் எவ்வாறு அஹ்மதி முஸ்லிமாக மாறினேன்?

இந்த சிறு நூலை நான் 40 ஆண்டுகளுக்கு முன்பு படித்தேன். இதனைப் படிக்க சில நிமிடங்களே போதுமானதாக இருந்தது. ஆனால் இதன் உதவியால் எனது வாழ்க்கையில் நிரந்தர மாற்றம் ஏற்பட்டது.

நான் இங்கிலாந்தில், யாக்ஷேர் என்னுமிடத்தில் பக்தியுள்ள குடும்பத்தைச் சார்ந்த ஆங்கிலேய பெண்மணி. எனது பாட்டனார் மார்க்கப் போதகராக இருந்தார். நான் ஞாயிறு வகுப்புகளுக்கு ஆசிரியையாகப் பணியாற்றினேன்.

1963 ல் நான் செவிலியராகப் பதிவு செய்து பயிற்சியில் இருந்துகொண்டு பின் ஆப்பிரிக்காவில் ‘ஸம்பீஸி பள்ளத்தாக்கு’ என்ற இடத்திற்கு கிறிஸ்தவ மத போதகராகச் செல்ல ஆயத்த நிலையில் இருந்தபோது இந்த ‘சிலுவையில் மரணம்’ என்னும் சிறு நூலைப் படித்தேன்.

எனக்கு கிறிஸ்தவ மார்க்கத்தின் மீது மிக உறுதியான, அளப்பரிய நம்பிக்கை இருந்தது. பைபிளின் மீது சிறந்த ஞானம் இருந்தும் கூட, ஏனைய மார்க்கங்களைப் பற்றிய அறிவு சிறிதளவே இருப்பதாக நான் உணர்ந்தேன். மற்ற மார்க்கங்களின் கருத்துக்களை நான் கற்றுக்கொண்டால் அதன் அடிப்படையில், பிற மதத்தவர்களையும், கிறிஸ்தவர்களாக எளிதில் மாற்ற முடியும் எனக் கருதினேன். அதற்காக ஹிந்து மதம், புத்த மதம், இஸ்லாம் குறித்து நூற்களை கற்றேன்.

மருத்துவமனையில் நடக்கும் மார்க்கம் சம்பந்தப்பட்ட விவாதக்குழுவிலும் நான் ஓர் உறுப்பினராக இருந்தேன். எனினும் மற்ற முக்கிய பேச்சாளர்கள் எல்லாருமே கிறிஸ்தவர்களாகவே இருந்தனர். இஸ்லாம் சம்பந்தப்பட்ட சில கருத்துக்களை படிக்கின்றபோது, எனது மன திருப்திக்காக, என் உள்ளத்தில் எழுந்த வினாக்களுக்கு பொருத்தமான பதிலைக் கண்டறிய நாடினேன். பலதரப்பட்ட கிறிஸ்தவ சபைகளைச் சார்ந்த அறிஞர்கள் எல்லாரும் என்னிடம் ‘விசுவாசத்தில் உறுதியுடன் நிலைத்திருக்கும்படி’ மட்டுமே கூறினார்கள். சான்றோர்களின் இந்த பதில் எனக்கு ஏமாற்றத்தையே தந்தது.

எனது சந்தேகங்களைப் போக்க மார்க்கம் குறித்த பல நூற்களை கற்றேன்; அத்துடன் நேர்வழி காட்டுதலுக்காக பிரார்த்தனை செய்து வந்தேன். கிறிஸ்து கூறியதை நினைவில் கொண்டேன். ‘கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான், தேடுகிறவன் கண்டறிகிறான், தட்டுகிறவனுக்கு திறக்கப்படும்‘ என்ற வசனங்களின்படி நான் படித்து, வேண்டி, எனது நண்பர்களுடன் விவாதம் புரிந்து எனது தேடுதல் பணியைத் தொடர்ந்தேன்.

பல மாதங்கள் இப்படிப்பட்ட அமைதியற்ற சூழலில் இருந்தபோது எனது பிரிவில் பணியாற்றும் ஒரு மருத்துவர் இந்த சிறிய நூலை எனக்கு கொடுத்தார். நான் அதனைப் படித்த போது, இறைவன் எனது வேண்டுதலுக்கு பதில் அளித்து விட்டதாக உணர்ந்தேன். ஒளியூட்டப்பட்ட விளக்குபோல எனது கேள்விகளுக்கெல்லாம் பதில் கிடைத்து விட்டது. என் உள்ளத்தில் அமைதி குடிகொண்டது.

இறைவனது கருணையினால் உடனே நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் அஹ்மதி முஸ்லிமாக மாறி விட்டேன்.

உண்மையைத் தேடுபவர் எவரும் இச்சிறு நூலைப் படித்து இறைவனிடம், அவனை அடைவதற்கான பயணத்தில் அவனது உதவியும், ஒத்துழைப்பும் கிடைப்பதற்காக அதிகமாக வேண்டுதல் புரியும்படி நான் ஆலோசனை கூறுகிறேன்.

இப்படிக்கு,

**சல்மா முபாரக்கா சயீத் கான்**
பிர்டீன், யாக்ஷேர்
இங்கிலாந்து
பிப்ரவரி-2004

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهُ وَ نُصَلِّى عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

# சிலுவையில் மரணம் ?

## இயேசுவின் பிறப்பு

யூதர்கள் மத்தியில் தோன்றிய இயேசுவின் பிறப்பையும், இறப்பையும் பற்றி உலகின் மூன்று பெரிய மார்க்கங்களான யூதம், கிறித்தவம், இஸ்லாம் ஆகியவற்றிற்கிடையில் மிகப்பெரிய கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. யூதர்கள் இயேசுவின் பிறப்பை முறையற்றது எனக்கூறி அவரது தாயார் மேரியின் மீது வீண்பழி சுமத்தியதால் குற்றவாளி ஆனார்கள். அவர் நெறிதவறிப் பிறந்த காரணத்தால் நல்லவர்களின் சபையில் நுழையத் தகுதியற்றவர் எனப் பிரகடனப்படுத்தினர். (இத்தகைய சிந்தனைகளிலிருந்து இறைவன் நம்மைக்காப்பானாக!)

ஆனால் கிறிஸ்தவர்களோ இயேசு தந்தையின்றி பிறந்தார். மேலும் அவரே தேவகுமாரன் என்று நம்புகின்றனர். இதிலிருந்து இயேசுவின் பிறப்பை பொருத்தவரையில் யூதர்களும், கிறித்தவர்களும் நேரெதிரான கொள்கைகளை கொண்டிருக் கின்றனர் எனத் தெரிகிறது.

முஸ்லிம்களோ, இயேசு தந்தையின்றி பிறந்தார். எனினும் தேவகுமாரன் இல்லை என்று நம்புகின்றனர். தந்தையின்றிப் பிறத்தல் என்பது வினோதமாகத் தோன்றலாம். ஆனால் அது இயற்கைக்கு அப்பாற்பட்டதல்ல. மருத்துவ உலகில் களங்கமற்ற

கன்னிப் பெண்களுக்கும் குழந்தை பிறந்துள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. தற்கால மனித குலத்தின் முதல் தந்தையான ஆதாம், தந்தையும், தாயும் இன்றிப் பிறந்தவர் என முக்கிய மூன்று மார்க்கங்களும் ஏற்றுக் கொள்கின்றன.

இயேசு ஓர் உண்மையான இறைதூதர் என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர். மனிதத் தொடர்பின்றிப் பிறந்ததால் தேவகுமாரன் அல்லது இறைத்தன்மை கொண்டவர் என்று கூறப்படுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. அவர் தூய்மை, எளிமை மிக்க மனிதராக திகழ்ந்தார். இயேசு புதிய ஏற்பாட்டில் தன்னைப் பற்றி பல இடங்களில் மனித குமாரன் என்றே கூறியுள்ளார்.

## இயேசுவின் மரணம்

இயேசுவின் மரணம் குறித்தும் யூத, கிறிஸ்தவ, முஸ்லிம் மார்க்கங்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. யூதர்களின் நம்பிக்கை யாதெனில், இயேசு பொய் தீர்க்கதரிசியாக இருந்ததால் சிலுவையில் மரித்தார். இதற்கு ஆதாரமாக அவர்கள் வேதாகமத்திலிருந்து தரும் சான்று:

*''கொலை செய்யப்பட ஒருவன் மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலை செய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால்....... தூக்கிப் போடப் பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்....''*

*(உபாகமம் 21:22,23)*

யூதர்களின் கருத்துப்படி இயேசு கள்ள தீர்க்கதரிசி. அதனால் இறை சாபத்திற்கு உள்ளாகி சிலுவையில் மரித்தார். கிறிஸ்துவர்களும் இயேசு சிலுவையில் அறையப்பட்டு சபிக்கப்பட்ட மரணத்தை அடைந்தார் என்றே நம்புகின்றனர்.

**பவுல் கூறுகிறார்:**

*''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.'' (கலாத்தியர் 3:13)*

ஆனால் திருக்குர்ஆன் கூறுவதாவது, இயேசு சிலுவையில் மரணிக்கவில்லை. இறைவன் அவனது நல்லடியார்களை அவர்களின் துயர வேளையில் காப்பாற்றுவது போன்று இயேசுவையும் சிலுவை மரணத்திலிருந்து காப்பாற்றினான்.

யோனா தீர்க்கதரிசி திமிங்கலத்தின் வயிற்றிலிருந்து உயிருடன் காப்பாற்றப்படவில்லையா? உண்மையாதெனில், இயேசு சிலுவையில் மயக்க நிலையில் இருந்தார். அதிலிருந்து கீழிறக்கப்பட்டபோது அவர் குணமடைந்தார். அதன் பின் அவர் தனது 120-வது முதிர்ந்த வயதில் இயற்கை மரணமடைந்தார்.

இயேசு கள்ள தீர்க்கதரிசி என்ற யூதர்களின் உறுதியான நம்பிக்கையின் காரணமாக யூத மதத் தலைவர்கள் குறிப்பாக பரிசேயர்கள் அவர் மீது அரசியல் குற்றச்சாட்டை கொண்டு வந்தனர். ரோமானிய சக்கரவர்த்திக்கு அவர் நம்பிக்கை துரோகம் செய்தார் என்றும், அவர் தம்மை 'யூதர்களின் ராஜா' என அழைக்கிறார் என்றும் குற்றம் சாட்டினர். ஆளுநர் பிலாத்து அவர் மீதுள்ள குற்றச்சாட்டை ஏற்க மறுத்தாலும் பெரும்பான்மை மக்களின் கொந்தளிப்பின் காரணமாக அவர் இயேசுவைச் சிலுவையில் அறையுமாறு தீர்ப்பளித்தார். அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து அவர் அதில் தொங்கி இருந்த நேரம் 3 அல்லது 4 மணிநேரம் மட்டுமே. பின்னர் அதிலிருந்து இறக்கப்பட்டபோது அவர் ஆழ்ந்த மயக்க நிலையில் இருந்தார். அவரை அவர்கள் அருகிலிருந்த தோட்டத்தில் அமைந்திருந்த ஒரு விசாலமான கல்லறையில் வைத்தனர்.

அக்காலத்தில் சிலுவை நிகழ்ச்சியின் போது குற்றவாளிகள் சிலுவையில் அறையப்பட்டு மரணமடைய பல நாட்கள் ஆகும். அவர்கள் கொடும் பசியாலும், நீடித்த தாகத்தாலும் கடுமையான வேதனைக்கு உள்ளானார்கள். பெரும்பாலும் அவர்களது கால்கள் முறிக்கப்படும். அவர்களது மரணம், தாமதித்த, நீடித்த மரணமாக பல நாட்களுக்கு இருக்கும். ஆனாலும் இயேசுவுக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்படவில்லை. அவர் ஒரு வெள்ளிக்கிழமை பிற்பகலில் சிலுவையில் அறையப்பட்டார். அடுத்த நாள் சபத் நாள்; யூதர்களுக்கு ஒரு மார்க்க கொண்டாட்ட நாளாக இருந்தது. அந்தப்

புனித நாளில் எந்தக் குற்றவாளியும் சிலுவையில் அறையப்பட்டிருக்கலாகாதுஎன்றமுறையில் அவர் சிலுவையி லிருந்து 3 அல்லது 4 மணி நேரத்திற்குள் கீழே இறக்கப்பட்டார். அவரது காயங்களினால் உண்டான இரத்த இழப்பின் காரணமாக அவர் மயக்க நிலைக்குத் தள்ளப்பட்டார். எனவே அவர் இறந்தவராகக் கருதப்பட்டார். அவரது உடல், அவரது சீடரான அரிமெத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பினால் கல்லறை தோட்டத்தில் வைக்கப்பட்டது. கல்லறையில் உயிருடன் இருந்த இயேசு, மூன்றாவது நாள் மாறு வேடத்தில் வெளியேறி தன் சீடர்களை கலிலேயாவில் சந்திந்து அவர்களுடன் உணவருந்தினார். அவரது சீடர்கள் பிரத்தியேகமாக தயாரித்த களிம்பை தடவியதால் அவரது காயங்கள் குணமடைந்தன.

இதுவே இயேசு சிலுவையில் அறையப்பட்டதன் உண்மை நிலையாகும். அவரது மரணம் பற்றி கிறிஸ்தவர்களின் கருத்து பிழையானது மட்டுமல்ல; வரலாற்று சான்றுகளுக்கும், பகுத்தறிவுக்கும் புறம்பானதாகும். அவர்கள் உண்மையிலேயே இயேசு சிலுவையில் மரித்து 3-ஆம் நாள் பரலோகத்திற்கு ஏறிச் சென்றார் என்று நம்புகின்றனர். எப்பேற்பட்ட முரண்பாடு! எப்பேற்பட்ட கட்டுக்கதை! பாருங்கள். தற்கால நவீன கிறிஸ்தவம் இயேசு சிலுவையில் மரணித்தார் என்ற நம்பிக்கையின் மீது அமைந்துள்ளது. எனினும், இயேசு சிலுவையில் மரணமடைய வில்லை என்றும், அவர் மரணித்த பின் மீண்டும் எழவில்லை என்றும் நிரூபிக்கப்பட்டால் கிறிஸ்துவம் என்ற மாளிகை நொறுங்கி தரை மட்டமாக ஆகி விடுகிறது.

தற்கால கிறிஸ்தவத்தின் தோற்றுநராகத் திகழும் பவுல் கூறுகிறார்:

*''கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா.''*

*(1 கொரிந்தியர் 15:14)*

பிரபல அமெரிக்க பிரசாரகர் காலம் சென்ற டாக்டர் ஷூமெர் கூறுகிறார்:

*''இயேசு சிலுவையில் மரணித்தார் என்ற நமது*

*நம்பிக்கை தவறு என்றால் பின்னர் இந்த முழு கிறித்தவமும் கேலிக்குரியதாக ஆகிவிடும்.''*

## 1. யோனாவின் அடையாளம்

இயேசு சிலுவையில் உயிர் துறக்கவில்லை என்று நிரூபிப்பதற்கு, நமது வாதங்களை வேதாகமத்திலிருந்தே எடுத்துக் காட்டுகிறோம்.

**புதிய ஏற்பாட்டில் நாம் படிப்பதாவது,**

*''ஜனங்கள் திரளாய் கூடி வந்திருக்கிறபொழுது அவர் இந்தச் சந்ததியார் பொல்லாதவர்களாய் இருக்கிறார்கள். அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும், யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாய் இருந்ததுபோல, மனுஷ குமாரனும் இந்த சந்ததிக்கு அடையாளமாயிருப்பார்.'' (லூக்கா 11:29,30)*

*''அவர்களுக்கு அவர் பிரதியுத்திரமாக; இந்த பொல்லாத விபச்சார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும், யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷ குமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்.'' (மத்தேயு: 12:39,40)*

இதில் இயேசு தமக்கு ஏற்பட்ட நிலையை யோனா தீர்க்கதரிசியின் நிலையுடன் ஒப்பிடுகிறார். நினிவே பட்டணத் தாருக்கு யோனா காட்டிய அடையாளத்தைப் பற்றி பைபிள் இவ்வாறு கூறுகிறது:

*''யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனை கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான்.''*

*''அந்த மீனின் வயிற்றிலிருந்து யோனா தன்*

*தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். அவர் எனக்கு உத்தரவு அருளினார். நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன். நீர் என் சத்தத்தைக் கேட்டீர்.'' (யோனா 1:17 ; 2:1-2)*

இவ்வசனத்தின்படி, யோனா, ஒரு பெரிய மீனால் விழுங்கப் பட்டார். அதில் அவர் மூன்று பகலும், மூன்று இரவும், தங்கி இருந்தார். பின்னர் அவர் அதன் வயிற்றிலிருந்து உயிருடன் வெளி வந்தார். இதுவே நினிவே பட்டணத்தாருக்கு கொடுக்கப்பட்ட அடையாளமாகும். மீனின் வயிற்றிலிருந்த யோனா இறைவனிடம் தனது விடுதலைக்காக வேண்டினார். இறைவன் அவருடைய வேண்டுதலை ஏற்றுக் கொண்டான். அதனால் உயிருடன் வெளிவந்தார்.

இயேசு, தமது காலத்திலுள்ள இந்த கெட்ட விபச்சார சந்ததிகளுக்கு யோனா தீர்க்கதரிசியின் அடையாளம் தவிர வேறு அடையாளங்கள் கொடுக்கப்படமாட்டாது எனக் கூறுகிறார்.

இப்போது, யோனா - இயேசு இவர்களுக்கிடையிலுள்ள அடையாளங்களின் ஒற்றுமைகள் என்ன என்பதை காண்போம்.

யோனா மீனின் வயிற்றினுள் உயிருடன் சென்றது போல, இயேசு பூமியின் இருதயத்தில் உயிருடன் செல்ல வேண்டும்; மீண்டும் அவர் உயிருடன் வெளிவர வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

யோனா, இயேசு இருவரும் தங்களுக்கு ஏற்பட்ட துன்பத்தின் நிமித்தம் அங்கலாய்ப்புக்கு உள்ளாகி தம் இறைவனிடம் அதிலிருந்து வெளிக் கொணறும்படி வேண்டினர். இருவரது வேண்டுதல்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இயேசு பூமியின் இருதயத்தில் உயிருடன் செல்லவில்லை என்றால், உயிருடன் வெளிவரவில்லை என்றால் இரண்டு அடையாளங்களுக்கும் இடையில் ஒற்றுமை எங்கு இருக்கிறது ?

இயேசு தம் காலத்து சமுதாயத்தினருக்கு ஒரே ஓர் அடையாளத்தைதான் காட்டுவதாக வாக்களித்திருந்தார்; அந்த

அடையாளமும் உண்மையாக இல்லாமல் போனால், அவர் தீர்க்கதரிசி என்ற உண்மைக்கு ஆதாரமாக வேறென்ன அத்தாட்சி உள்ளது?

இயேசு யோனாவின் அடையாளத்தை கோடிட்டுக் காட்டியதன் நோக்கமே அவர் சிலுவையில் மரணிக்க மாட்டார் என்பதற்குதான்.

எனவே, ஆழ்ந்த மயக்கத்திலிருந்தார் என்ற கோட்பாடு எவ்வகையிலும் தவறான யூகமல்ல.

## 2. பிலாத்துவின் மனைவி கண்ட கனவு

*''அவன் (பிலாத்து) நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி, நீர் அந்த நீதிமானை (இயேசுவை) ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்கு சொப்பனத்தில் வெகுபாடு பட்டேன் என்று சொல்லச் சொன்னாள்.'' (மத்தேயு 27:19)*

பிலாத்துவின் மனைவி கண்ட கனவு உண்மையானதும், தக்க சமயத்தில் காண்பிக்கப்பட்டதுமாக உள்ளது. இதன் உட்கருத்து யாதெனில், இயேசு சபிக்கப்பட்ட சிலுவை மரணத்திலிருந்தும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதாகும். இறைவன் தனக்கு நெருக்கமானவர்களை வேறொருவர் கண்ட கனவின் மூலமாக காப்பாற்றுகிறான்.

உதாரணமாக யோசேப்பு, பாரோனின் இரு கனவுகளுக்கு விளக்கம் கொடுத்ததால் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். இறைவன் இயேசுவை அவரின் எதிரிகளிடமிருந்து காப்பாற்ற விரும்பியதால் ரோமானிய ஆளுநரின் மனைவி கண்ட இச்சொப்பனம் சாதகமான தீர்ப்பை அவர் அளிக்க ஏதுவாயிற்று.

## 3. ரோமானிய ஆளுநரின் இரக்க சிந்தை

யூதர்கள் இயேசுவின் வழக்கை பாலஸ்தீனிலுள்ள ரோமானிய ஆளுநர் பிலாத்துவிடம் கொண்டு சென்றனர். அவர் அந்த வழக்கை சட்டப்படி விசாரித்து, அவருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளிலிருந்தும் அவர் குற்றமற்றவர் என முடிவு செய்தார்.

அவர் கூறினார்:

*“ஜனங்களை கலகத்திற்குத் தூண்டி விடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டு வந்தீர்கள். நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன் மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை.” (லூக்கா 23:14)*

*“மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து, நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன். பஸ்கா பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை பண்ணுகிற வழக்கம் உண்டே. ஆகையால், யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலை பண்ண உங்களுக்கு மனதுண்டா? என்றான். அப்பொழுது அவர்களெல்லாரும் இவனை அல்ல, பரபாசை விடுதலை பண்ண வேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள். அந்த பரபாஸ் என்பவன் கள்ளனாயிருந்தான்.” (யோவான் 18:38-40)*

*“அது முதல் பிலாத்து அவரை விடுதலை பண்ண வகை தேடினான். யூதர்கள் அவனை நோக்கி இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகினதல்ல. தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என சத்தமிட்டார்கள்.” (யோவான் 19:12)*

இவ்வசனங்களின்படி யூதர்கள் இயேசு மீது சுமத்திய குற்றச்சாட்டுகளை விட்டும் அவர் களங்கமற்றவர் என்று ஆளுநர் கருதினார் எனத் தெரிகிறது. அவர் தம்மால் இயன்ற அனைத்து வழிகளிலும் அவரை விடுதலை செய்ய முயற்சி செய்தார். ஆனால் யூதர்கள் ரோமிலுள்ள சீஸரிடம் முறையிடப் போவதாக பயமுறுத்தியதால் அவர் அவர்களுக்கு இணங்கி இயேசுவை அவர்களிடமே ஒப்படைத்தார். ஆனாலும் ரகசியமாக இயேசு காப்பாற்றப்பட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இதற்கு ஆளுநரின் மனைவி முன்பு கண்ட கனவும் ஒரு காரணமாகும். மேலும் தலைமை குருக்கள் பொறாமையின் காரணமாக இயேசுவுக்கு எதிராக சூழ்ச்சி செய்துள்ளனர் என்பதையும் ஆளுநர் நன்கு தெரிந்திருந்தார்.

## 4. இயேசுவை காப்பாற்ற பிலாத்து மேற்கொண்ட முயற்சிகள்

ஆளுநர் பிலாத்து, இயேசு கிறிஸ்து குற்றமற்றவர் என்று நன்றாக அறிந்திருந்தார். அதனால் அவர் இயேசுவின் உயிரைக் காப்பாற்ற ஒரு திட்டம் வகுத்தார். ரோமானிய பேரரசின் பொறுப்புள்ள அதிகாரியாக இருந்ததால், வெளிப்படையாக முன் வந்து முயற்சிகளை மேற்கொள்ள இயலவில்லை; எனினும் அவர் இந்த முழுத் திட்டத்தையும் திறமையாகக் கையாண்டு செயலாற்றும் நாடகத்தில், முக்கிய கதா பாத்திரமாக விளங்கினார். இந்த காட்சியில் பிற பாத்திரங்கள், அரிமெத்தியாவை சார்ந்த யோசேப்பு ஒரு கௌரவ ஆலோசகராகவும், இயேசுவின் சீடராகவும் இருந்தார். அவருக்கு ஏற்கனவே பாறையில் வெட்டப்பட்ட ஒரு கல்லறை அருகில் இருந்தது. மற்றொரு பாத்திரமாக திகழ்பவர் நிக்கொதேமு என்னும் யூத கல்விமான்; இவர் எல்லா விஷயங்களிலும், அந்தரங்க சாட்சியாக இருந்தார்.

> ***"ஆரம்பத்திலே, ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப் போளமும், கரிய போளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தான்." (யோவான் 19:39)***

பிலாத்து சாமர்த்தியமாக இயேசுவை சிலுவையில் அறைய வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளையைத் தேர்ந்தெடுத்ததால் இயேசுவை சூரிய அஸ்தமனமான பின் சிலுவையில் அப்படியே விட்டு வைக்க முடியாமல் போயிற்று. அடுத்த நாள் சபத் நாளாக இருந்தது; அது யூதர்களின் புனித நாளாகும். அவர் தமது திட்டத்தை நிறைவேற்ற நம்பிக்கைக்குரிய நண்பர்களான யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரை தேர்ந்தெடுத்தார். இயேசுவுக்கு நினைவாற்றல் திரும்பத் தேவையான எல்லா திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறில்லையென்றால், நிக்கொதேமு எதற்காக கரிய போளமும், வெள்ளைப் போளமும் கலந்து கொண்டு வர வேண்டும்? யூதர்களையும் ரோமானிய பேரரசையும் திருப்திப் படுத்த, இயேசு இறந்து விட்டதாக அரசு ஆவணங்களில்

சித்தரிக்கப்பட்டார். அரிமெத்தியாவை சார்ந்த யோசேப்பு தைரியமாக இயேசுவின் உடலை ஒப்படைக்குமாறு ஆளுநரிடம் கேட்க, உடனே ஆளுநர் அவ்வேண்டுகோளை நிறைவேற்றினார். இச்செயல் முன்பே திட்டமிடப்படாமல் இருந்திருந்தால், எவ்வாறு ஆளுநர் இயேசுவின் உடலை ஒரு அந்நியரிடம் ஒப்படைத்திருப்பார்?

இத்திட்டத்தைப் பற்றி இயேசுவிடம் கூட முன்பே தெரிவிக்கப்பட்டிருந்தது என்று நம்ப காரணமிருக்கிறது.

எவ்வாறு யோனா மூன்று பகலும், மூன்று இரவும் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்தாரோ, அதே போல மனித குமாரனும் மூன்று பகலும், மூன்று இரவும் பூமியின் இருதயத்தில் இருப்பார் என்ற அவருடைய முன்னறிவிப்பு உண்மையாக வேண்டும் என்பதற்காக இயேசு, நிக்கொதேமு இவர்களுக் கிடையில் முந்தின நாள் இரவு நிகழ்ந்த சந்திப்பு இத்திட்டம் முழுவதையும் தெளிவாக்குகிறது.

## 5. சிலுவையில் அறையப்பட்டிருந்த நேரம்

இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்த நேரம் அவருக்கு மரணத்தை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு நீண்டதாக இல்லை. பொதுவாக குற்றவாளிகளுக்கு சிலுவை மரணம் ஏற்படுவதற்கு அதிக நாட்கள் ஆகும். சிலுவையில் ஏற்படும் மரணம் நீடித்ததாகவும், கைகள் கால்களில் உண்டான காயத்திலிருந்து வெளியான இரத்த இழப்பு, உடல் சோர்ந்து போதல், வேதனை, கடும் பசி, தாகம் ஆகியவற்றாலும் ஏற்படும். இம்மரணம் ஏற்பட குறைந்தபட்ச கால அளவு 24 முதல் 28 மணி நேரமாகும். எனினும் சில பொழுது மரணம் ஏற்பட பல நாட்கள் ஆகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளின் கால்கள் முறிக்கப்படும். அப்போது உள் இரத்தக் கசிவின் காரணமாக மரணம் விரைவில் ஏற்படும். சிலுவை சம்பவம் பற்றி மேலும் ஆய்வு செய்கின்றபோது இயேசு மிகக் குறைந்த நேரமே சிலுவையில் அறையப் பட்டிருந்ததாகத் தெரிகிறது. அவர் சிலுவையில் தொங்கிய நேரம் மூன்று அல்லது நான்கு மணி நேரத்தை விட அதிகமல்ல. இயேசு 33 வயது வாலிபராக இருக்கின்ற நிலையிலும், நல்ல உடல்

ஆரோக்கியத்தைப் பெற்றிருந்த நிலையிலும், அவர் இக்குறைந்த காலகட்டத்தில் மரணமடைந்திருப்பார் என எதிர்பார்க்க முடியாது. அது மட்டுமல்ல; அவரது கால்கள், அதே நாளில் சிலுவையில் அறையப்பட்ட மற்ற இரண்டு கள்ளர்களின் கால்கள் முறிக்கப்பட்டதுபோல் முறிக்கப்படவில்லை.

ரோமானிய காலண்டரில் ஒரு நாள் என்பது சூரிய உதயத்திலிருந்து தொடங்கி அது அஸ்தமிக்கும்போது முடிவுக்கு வருகிறது. இத்தகு நடைமுறையே இன்று அரபு நாடுகளிலும் கடைபிடிக்கப்படுகிறது.

யோவானின் 19:14 கூற்றுப்படி பிலாத்து கடைசியாக யூதர்களிடம் இயேசுவை சிலுவையில் அறைவது பற்றி பேசியது வெள்ளிக்கிழமையின் 6-வது மணி நேரமாக இருந்தது. பின் அவரை அவர்களிடம் ஒப்படைத்தார்.

> ***‘‘ஆறாம் மணி நேர முதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணி நேரத்திலே, இயேசு: ஏலோயீ! ஏலோயீ! லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று அர்த்தமாம்.’’ (மாற்கு 15:33,34)***

இதிலிருந்து இயேசு அந்த நாளின் 9-வது மணி நேரம் வரை தம் முழு உணர்வோடு இருந்தார் என்றும், அதன் பின்பே அவர் நினைவாற்றலை இழந்து மயக்க முற்றார் என்றும் தெரிகிறது. இதனைத்தான் புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள் இயேசு ஆவியை விட்டார் எனக் குறிப்பிடுகின்றனர்.

இதை எழுதிய எவரும் கண்ணால் கண்ட சாட்சிகளாக அவ்விடத்தில் இருக்கவில்லை. ஆழ்ந்த மயக்கம் என்பது உயிரை விட்டதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. சிலுவையில் உயிரை விடுவது என்பது சாபத்திற்குரிய மரணம். பைபிளில் நாம் படிப்பது, தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன் என்பதாகும். (உபாகமம் 21:23) கிறிஸ்தவர்களுக்கு எப்படிப்பட்ட துணிச்சல் இருந்தால் ஓர் உண்மையான இறை தூதரை, இறை சாபத்திற்கு உள்ளானார் எனக் கூறுவர்?

## 6. இரத்தமும், தண்ணீரும்

*“அந்தப்படி போர்ச்சேவகர் வந்து அவருடனே கூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து அவர் ‘மரித்து’ இருக்கிறதைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.” (யோவான் 19:32-34)*

போர்ச் சேவகர்கள் இயேசுவின் கால்களை முறிக்கவில்லை. ஏனெனில் அவர் ‘இறந்து’ போனதாக அவர்கள் கருதினர். ஆனால் உண்மையில் அவர் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தார். அல்லது கோபமுற்ற யூதர்களை அமைதிப்படுத்த அவர் இறந்துபோனதாக பிரகடனப்படுத்தப்பட்டார்.

ஆனால் ஒரு போர்ச் சேவகர் அவரது விலாவில் ஈட்டியால் குத்தினார். உடனே இரத்தமும், தண்ணீரும் பீறிட்டது. இது உயிர் இன்னும் உள்ளது என்பதற்கு ஆணித்தரமான சான்று. இறந்த உடலின் இருதய செயல்பாடு நின்று விடுவதன் மூலமாக அதிலிருந்து இரத்தமும், நீரும் பீறிட்டு வராது. அறிவுடன் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு இதில் மாபெரும் அடையாளம் உள்ளது.

## 7. கண்ணால் கண்ட சாட்சிகள் ஏதுமில்லை

சுவிசேஷத்தை எழுதிய மூவர், 6-லிருந்து 9-ம் மணிவரை பூமியில் எங்கும் இருள் பரவி இருந்ததாகவும், பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாகவும், பாறைகள் பிளந்ததாகவும், ஆலயத்தின் திரைச்சீலை இரண்டாக கிழிந்ததாகவும் எழுதியுள்ளனர்.

மாபெரும் புழுதிப் புயலுடன் பூமி அதிர்ச்சி ஏற்படும் போது மக்கள் தம் இல்லம் செல்ல அவசரமாக முயல்வார்களே தவிர, எங்கும் வேடிக்கை பார்ப்பதற்காக நேரத்தை செலவிட மாட்டார்கள் என்பது சாதாரண நடைமுறை விஷயமாகும். இப்போது சற்றே சிந்தனை செய்து பாருங்கள். இயேசு உண்மையிலேயே சிலுவையில் மரித்தார் என்று கதை கட்டும் அளவுக்கு யார் அங்கு கண்ணால்

கண்ட சாட்சியாக விளங்கினார்கள்? எந்த யூதராவது அங்கு இருந்திருந்தால், புயல் ஏற்படுவதையும், பூமி அதிர்ச்சிக்குள் ளாவதையும் கண்டு அஞ்சி வீட்டுக்கு ஓடியிருப்பார். சீடர்களைப் பொருத்தமட்டில் அவர்கள் ஏற்கனவே சிலுவைச் சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஓடி விட்டனர்.

*''அதற்கு அவன் நீங்கள் சொல்லுகிற மனுஷனை (இயேசுவை) அறியேன் என்று சொல்லி சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான்''. (மாற்கு 14:71)*

*''அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்''. (மாற்கு 14:50)*

சுருக்கமாக, இயேசு ஆவியை ஒப்புவித்தார் எனக் கூற கண்ணால் கண்ட ஒரு சாட்சி கூட சம்பவ இடத்தில் இல்லை. இவை யாவும் வெறும் யூகமும், வீண் கற்பனையுமே ஆகும்.

## 8. காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் கோத்திரத்தாரைத் தேடி இயேசு புறப்படல்.

*1. ''இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்.'' (லூக்கா 19:10)*

*2. ''இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும். அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.'' (யோவான் 10:16)*

*3. ''அவரோ அவர்களை நோக்கி நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கிக்க வேண்டும். இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்.'' (லூக்கா 4:43)*

*4. ''அதற்கு அவர், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்ல வென்றார்.'' (மத்தேயு 15:24)*

இவ்வசனங்களிலிருந்து தெரியும் உண்மையாதெனில்

இயேசுவின் வருகையின் நோக்கம் இஸ்ரவேலின் 12 கோத்திரத்திற்கும் தம் செய்தியைத் தெரிவிப்பதே ஆகும். அவர்கள் இயேசுவின் வருகையின் போது கிழக்கத்திய நாடுகளில் பாலஸ்தீனத்திலிருந்து இந்தியா வரை சிதறுண்டு கிடந்தனர். 12 கோத்திரத்தவருள் 2 கோத்திரத்தார் மட்டுமே அப்போது பாலஸ்தீனத்தில் இருந்தனர். மற்ற 10 கோத்திரத்தாரும் பாலஸ்தீனத்திலிருந்து இந்தியா வரை உள்ள நிலப்பகுதியில் பரவிப்போய் இருந்தனர். இயேசு மற்ற 10 கோத்திரத்தையும் அழைத்து தம் தூதுச் செய்தியை எட்டச் செய்யவில்லை என்றால் அவர் தமது வருகையின் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினார் என்று கூற முடியாமல் போயிருக்கும். சொற்ப வயதில் (33 வயதில்) இயேசு உயிர் துறந்து விட்டார் என்ற யூகம் எந்த நோக்கத்திற்காக அவர் அனுப்பப்பட்டாரோ அதன்மீது விழுந்த மாபெரும் அடி ஆகும்.

ஆனால் உண்மை யாதெனில், இயேசு சிலுவை மரணத்திலிருந்து தப்பி காணாமற்போன தம் ஆடுகளைத் தேடி கிழக்கத்திய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து சென்றார். வரலாற்றுச் சான்றுகள், தொல்பொருள் ஆராய்ச்சியின் நவீன கண்டுபிடிப்புகள் இதற்கு சாதகமாகத் திகழ்கின்றன. இயேசு காணாமற்போன தம் ஆடுகளை பெர்ஷியா, ஆப்கானிஸ்தான், காஷ்மீர் ஆகிய இடங்களில் கண்டு போதனை செய்தார். இன்னும் குறிப்பாகக் கூறுவதென்றால், அவருக்கு பாலஸ்தீனத்தை விட இங்கு அதிக வெற்றி கிடைத்தது. அவர் இயற்கை மரணமடைந்து, காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகரில் அடக்கம் செய்யப்பட்டார்.

## 9. தம் எதிரிகளை இயேசு வெற்றி கொள்ளுதல்

இயேசு தமது சீடர்களிடம் இவ்வாறு கூறினார்:

***“இதோ நீங்கள் சிதறுண்டு அவனவன் தன் தன் இடத்திற்குப் போய் என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும். அது இப்பொழுது வந்திருக்கிறது. ஆனாலும், நான் தனித்திரேன். பிதா என்னுடனே கூட இருக்கிறார். என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.***

*உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.''*
*(யோவான் 16:32, 33)*

இயேசுவின் வெற்றி எதில் இருக்கிறது எனப் பார்ப்போம். அவர் சிலுவையில் உயிரை விடுவதிலா? அல்லது சிலுவை மரணத்திலிருந்தும் அவர் தப்பிப்பதிலா? அவர் சிலுவையில் மரித்திருந்தால் யூதர்கள் வெற்றியடைந்தவர்களாக இருந்திருப்பார்கள். ஏனெனில் அவர்களின் முக்கிய நோக்கமே இயேசு தம்மை மெசாயா என்று அழைப்பதில் அவர் பொய்யர் என நிரூபிப்பதேயாகும். இக்கொள்கைக்கு பக்கபலமாக அவர்களுக்கு இருக்கும் வேத வசனம் மொழிவதாவது:

*''..........தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்ட வனாவான்.'' (உபாகமம் 21:23)*

ஆனால் அவர் சிலுவையில் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்து உயிருடன் வெளிக் கொணரப்பட்டார்; அவர் பூமியின் இருதயத்தில் உயிருடன் நுழைந்தார்; உயிருடனே வெளி வந்தார் என்றால், அவர் உண்மையிலேயே தமது எதிரிகளை வெற்றி கொண்டிருக்கிறார். அவர்களின் தீய திட்டங்கள் அனைத்தையும் முறியடித்தார் என உறுதி கூறலாம்.

இயேசு கூறுகிறார்:

*''யோனா நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமா யிருந்தது போல மனுஷ குமாரனும் இந்த சந்ததிக்கு அடையாளமா யிருப்பார்'' (லூக்கா 11:30)*

வேறுவிதமாகக் கூறுவதென்றால் எவ்வாறு யோனா தீர்க்கதரிசியை மீன் வயிற்றிலிருந்து இறைவன் காப்பாற்றினானோ அவ்வாறு மரணத்தின் பிடியிலிருந்தும் சர்வ சக்தி படைத்த இறைவன் தம்மை காப்பாற்றுவான் என யூதர்களை நோக்கி இயேசு கூறினார். இவ்விரு உதாரணங்களுக்கிடையில் உண்மையில் ஒற்றுமை உண்டு எனக் கூற முடியும் என்றால் இயேசு பூமியின் இருதயத்தில் உயிருடன் நுழைந்து உயிருடனே வெளிவர வேண்டுமல்லவா?

## 10. அவரது பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது

பைபிள் கூறுவதாவது, இறைவன் தனது நல்லடியாரின் பிரார்த்தனைகளை கேட்டு, அவர்களை கஷ்டங்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கிறான்.

புதிய ஏற்பாடு இவ்வாறு மொழிகிறது:

*''.........நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. எலியா என்பவன் நம்மைப் போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் மழை பெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம் பண்ணினான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது.'' (யாக்கோபு 5:16-18)*

*''.....இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து பிதாவே, நீர் எனக்கு செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்கு செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.'' (யோவான் 11:41,42)*

*''அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடும், ஆகிலும், என் சித்தத்தின்படியல்ல; உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்.'' (மாற்கு 14:36)*

இவற்றிலிருந்து தெரிவது என்னவென்றால், இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு மிகவும் அஞ்சினார். எனவே அவர் இந்த கசப்பான மரண பாத்திரம் தன்னிடமிருந்து அகற்றப்பட வேண்டும் என்று மிகப் பணிவுடன் வேண்டினார். இயேசு தாழ்மையுடனும், உருக்கத்தோடும் தம் பிதாவிடம் தம்மை சாபத்திற்குரிய சிலுவை மரணத்திலிருந்தும் இரட்சிக்கும்படி பணிவுடன் வேண்டினார். உண்மை இவ்வாறு இருக்கின்ற போது அவர் சிலுவையில் மரணமடைந்திருந்தால் அவர் உலகை வெற்றி

கொண்டார் என எப்படி கூற முடியும்? அவரது முழு வாழ்க்கையின் நோக்கமும் வீணாய் போயிருக்கும். அவருடைய இறை தீர்க்கதரிசி என்ற வாதத்தின் மீது தீயவர்கள் சவால் விட்டிருப்பார்கள். சிலுவையில் மரணம் என்ற நினைப்பை அவரால் சிறிதும் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது.

உண்மை இறை தீர்க்கதரிசியான அவர் மரணத்திற்கு அஞ்சவில்லை; அதே வேளையில் நிச்சயமாக அவர் சிலுவை மரணத்திற்கே மிகவும் அஞ்சினார். ஏனென்றால் சிலுவை மரணம் என்பது சாபத்திற்குரிய மரணமாக கருதப்படும். அது அவருடைய தூதுச் செய்தியை எட்டச் செய்யும் தூய பணியை மறுப்பதாக அமைந்துவிடும்.

***‘‘அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு.’’ (எபிரெயர் 5:7)***

அதனால் அவரது உளப்பூர்வமான வேண்டுகோள் சந்தேகத்திற்கிடமின்றி இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என உறுதியாக நம்ப முடியும். அதன் பயனாக அவர் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சிலுவையிலிருந்து உயிர் தப்பி, காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் கூட்டத்தாரை கிழக்கத்திய நாடுகளில் கண்டு தம் தூதுச் செய்தியை எட்டச் செய்யும் வரை வாழ்ந்தார்.

அவரோ அவர்களை நோக்கி: ***‘‘நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கிக்க வேண்டும்; இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்.’’ (லூக்கா 4:43)***

அன்பார்ந்த மக்களே! இந்த சான்றுகள் இயேசு சிலுவையில் தம் உயிரை விட்டார் என்ற கொள்கை பைபிளின் அடிப்படையில் கூட தவறானவையே என்பதை தெளிவாக நிரூபித்துக் காட்டுகின்றன. எனவே, இந்தத் தவறான கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இன்றைய கிறிஸ்தவ மார்க்கத்தின் அடித்தளமே உறுதியற்றது என்பது தெளிவாகிறது!